திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கேள்விகளுக்கு மேல் கொடுப்பதில்லை. ஒன்று அல்லது இரண்டுதான் கேட்க வேண்டும். மேலும் கேட்க அனுமதி கொடுத்தால் அது முன்மாதிரியாக வந்துவிடும்.

(இ) சென்னை மாநகராட்சித் தேர்தலைக் காலவரம்பின்றி தள்ளிப் போடுவது குறித்து

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance namely, the indefinite postponement of the elections to the Madras City Corporation.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டின், சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தமும் பதவிக்கால நீடிப்பும்) சட்டத்தின் (சட்டம் எண். 22/71) 39-வது பிரிவின்படி, சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 1—11—1973 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—10—1973-ல் முடிவடைகிறது.

சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானித்தபடி, சட்டம் எண். 7/73-ல், சென்னை நகரின் கோட்டங்களின் எண்ணிக்கை 120-ல் இருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது. கோட்டங்களின் எல்லை வரையறை விஷயங்களை 12 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக் குழுவின் மூலமாக மன்றத்திற்கு வைக்கப்பட வேண்டும் என்றும் மாநகராட்சி மன்றம் தீர்மானித்தது. இத்தீர்மானத்தை அரசு அங்கீகரித்தது. கோட்டங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் வரைவுத் திட்டத்தையும், வாக்காளர் பட்டியலைத் திருத்தியமைக்கும் வேலையையும் குறித்த காலத்திற்குள் முடித்து, தேர்தலை அக்டோபர் 73-ல் நடத்த வகை செய்யுமாறு அரசு மாநகராட்சி ஆணையரை கேட்டுக்கொண்டது. மின்சார வெட்டின்

1973 ஆகஸ்ட் 13] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

காரணமாக வாக்காளர் பட்டியலை அச்சிடும் வேலை இன்னும் முடிவுறவில்லை என்று மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், கோட்டங்களின் எல்லைகளை வரையறை செய்யும் வேலையும் இன்னும் முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை நகர்ப்புறங்களையும், வில்லிவாக்கம் பேரூராட்சியையும் சென்னை நகருடன் சேர்க்கும் கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுகுறித்து சென்னை மாநகராட்சி மன்றத்தின் கருத்து கேட்கப்பட்டுள்ளது. மன்றத்தின் கருத்து இன்னும் அரசுக்கு வரவில்லை.

தற்போது, மாநகராட்சித் தேர்தலைத் தள்ளி வைக்கும் எண்ணம் அரசு தரப்பில் இல்லை. வாக்காளர் பட்டியலை அச்சிடும் வேலை முடிந்ததும், கோட்டங்களின் எல்லைகளைத் திருத்தியமைக்கும் வரைவுத் திட்டம் மாநகராட்சி ஆணையரால் அரசுக்கு அனுப்பப்படும். கோட்டங்களின் எல்லைகளைத் திருத்தியமைக்கும் வரைவு திட்டமும், மாநகராட்சியோடு சில பகுதிகளை இணைக்கும் கருத்துருமீது மாநகர மன்றத்தின் கருத்தும், அரசுக்குக் கிடைத்த பின்பு, இதுபற்றி அரசு பரிசிலித்து முடிவு எடுக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இதே தேர்தல் கால தாமதமின்றி நடத்தப்படும் என்று இந்தச் சட்டப் பேரவையிலேயே கூறப்பட்டது. மாநில அதிகார வரம்பிலேயுள்ள தேர்தல் இது. டீ-லிமிடெஷன் செய்வது, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது ஆகியவை வேகமாக நடக்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 120 கோட்டங்களை 150 ஆகப் பிரிப்பதற்கான திட்டங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அது மீண்டும் அனுப்பப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகுதான் செய்யப்படும். எனவே, மாநில அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும், அவசர அவசியத்தை உத்தேசித்து அதை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.